## நாள் 1 : பொய் உதடு – பகுதி –1

**நீதிமொழிகள் 12 : 22**

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.

பொய் தேவனிடத்திலும் மக்களிடமும் உள்ள உறவை அழிக்கக் கூடியதாயிருக்கிறது, பொய் பயத்தை உண்டு பண்ணுகிறது. பொய்யால் நாம் தைரியத்தை இழக்கிறோம், பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள், பொய் பேசுவதில் நிறைய வகைகள் உண்டு, ஏமாற்றிப் பேசுதல், பாதி உண்மையை பேசுதல், மிகைப்படுத்தி பேசுதல், புரட்டிப் பேசுதல் போன்றவைகள் பொய்யின் வெவ்வேறு வடிவத்களாகும்..

**(1) பொல்லாப்பு ( Deceitfulness)**

**1 பேதுரு 3 : 10**

ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வெண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து.

பொல்லாப்பான உதடு நம் வாழ்க்கையில் வேதனையையும் ஆயுசு நாட்களை குறைக்கவும் செய்கிறது, என்று பேதுரு எச்சரிக்கிறார். யாக்கோபு, ஏசாவுக்கு என்ன செய்தார் என்று நினைத்துப் பாருத்கள் (யாக்கோபு என்ற பெயருக்கு ஏமாற்றுக்காரன் என்று அர்த்தம்), யாக்கோ்ம் அவனுடைய தாயும் சேர்ந்து தன் சகோதரனுடைய புத்திரபாகத்தை பெறுவதற்கு ஏசாவைப் போல உடையை அணிந்து, ஏசாவுக்கு கிடைக்க வேண்டிய எல்லா ஆசீர்வாதத்களையும் ஏமாற்றிப் பெற்றுக கொண்டான். ஏசா தன் சகோதரனால் ஏமாற்றப்பட்டதை அறிந்தபோது அது அவனுக்குள் கோபத்தையும் கசப்புணர்வையும் கொண்டுவந்தது. அதனால் தன் சகோதரனை கொலை செய்ய தீர்மானித்தான், ஏசாவுக்கு பயந்து யாக்கோபு தூர தேசத்துக்கு ஓடிப் போய் தன் தாய்மாமன் பெத்துவேலிடத்தில் வேலை செய்தான், இந்த காரியத்தால் யாக்கோபு தன் மாமாவால் நிறையமுறை ஏமாற்றப்பட்டான். அவனுடைய வாழ்க்கை வேதனையானது, அவனுடைய சந்தோஷம் நீண்ட நாள் நிலைக்கவில்லை.

**சத்கீதம் 55 : 23**

தேவனே, நீர் அவர்களை அழிவின் குழியில் இறங்கப்பண்ணுவீர், இரத்தப்பிரியரும் சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதிவரையிலாகிலும் பிழைத்திருக்கமாட்டார்கள், நானோ உம்மை நம்பியிருக்கிறேன்.

எது நமக்குள் பொல்லாப்பை உண்டு பண்ணுகிறது? நாம் தேவன்மேல் விசுவாசம் வைக்காமல் இருக்கும் போது நாம் பொல்லாப்பானவர்களாய் இருக்கிறோம், அவ்வாறு இருப்பது, தேவனை வேதனைப்படுத்தும் காரியமாய் இருக்கிறது.

<u>பாதி உண்மைகள்</u>

நேர்மை என்பதற்கு ஆத்லத்தில் Integrity என்று அர்த்தம், என்பது கணிதத்தில் உள்ள integer என்ற வார்த்தையில் உருவானது, அது பாதி அல்லது பின்னத்ளை உடையது அல்ல மாறாக முழு எண்ணையும் குறிக்க கூடியதாகும், நேர்மை என்பது முழு உண்மையையும் சொல்லக்கூடியது, பாதி உண்மை உண்மையில் சில என்பது அல்ல, அது முழு உண்மையையும் சொல்வது.

நம்முடைய நேர்மையானது நிறைய நேரத்களில் சோதிக்கப்படுகிறது, அதாவது நாம் அலுவலகத்திற்கு தாமதமாக செல்லும் போது அல்லது பள்ளி கல்லூரிகளுக்கு தாமதமாக செல்லும்போது நாம் முழு உண்மையை கூறாமல் பாதி உண்மையை பேசுகிறோம். நான் தொலைந்த சாவியை அல்லது புத்தகத்தை தேடிக் கொண்டிருந்தேன், அல்லது பேருந்து தாமதமாக வந்தது, போக்குவரத்து

பாதிப்பு, என்று கூறவோம், பின்னர் மாலை வீட்டிற்கு தாமதமாக வரும் போது, சிலவற்றை கூறவோம், நான் நண்பர்களோடு இருந்தேன். சிறப்பு வகுப்பு என்று கூறும்போது, நாம் உண்மையை ஏற்றுக் கொள்ளாமல் மற்றவர்களை குறைகூறிக் கொள்கிறோம்.

**யோபு 27 : 5**

நீங்கள் பேசுகிறது நீதியென்று நான் ஒத்துக்கொள்வது எனக்குத் தூரமாயிருப்பதாக. என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்.

**உண்மையை பேசுவது சிறப்பானதாகும், முழு உண்மை, உண்மையை தவிர வேறல்ல**

---

## நாள் 2 : பொய் உதடு   பகுதி – 2

---

### <u>மிகைப்படுத்தி பேசுதல்</u>

ஒரு கதையை சொல்லும்போது கேட்பவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி பேசுவது என்பது பொதுவான ஒன்றாயிருக்கிறது, அப்படிப் பேசும் போது மிகைப்படுத்தி பேசுவது என்பது தவறல்ல என்று நினைக்கிறோம், ஆனால் அது பொய்யின் மறுபாகமாயிருக்கிறது. ஒருவன் எப்போதும் மிகைப்படுத்தி பேசக்கூடிய குணத்தை உடையவர் என்றால் அவர்மேல் மற்றவர்கள் வைத்த நம்பிக்கையை விரைவில் இழந்துவிடுவார். அவர் சொல்வதை மக்கள் நம்பமாட்டார்கள் நாம் பள்ளியில் படித்த கதை ஞாபகம் வரும், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் மக்களை ஏமாற்றுவதற்க்கு , புலி வராமலே, புலி வந்துவிட்டது என்னை காப்பாற்றுத்கள் என்று சத்தம் போடுவான், மக்கள் அவனை காப்பாற்ற வந்து ஏமாந்து போவார்கள். ஒரு முறை உண்மையில் புலி வந்து அவன் சத்தம் போடுவான் ஆனால் யாரும் வராமல் அவன் புலியால் அடிக்கப்பட்டு இறந்து போவான்.

**வெளி 21 : 8**

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

நாம் மிகைப்படுத்தி பேசுவதன் மூலமாக மற்றவர்களால் கவரப்படலாம். ஆனால் பொய் பேசுவர்களின் விதியை தேவன் தீர்மானிக்கிறார்.

**நீதிமொழிகள் 8 : 7–8**

7. என் வாய் சத்தியத்தை விளம்பும், ஆகாமியம் என் உதடுகளுக்கு அருவருப்பானது.
8. என் வாயின் வாக்குகளெல்லாம் நீதியானவைகள்; அவைகளில் புரட்டும் விபரீதமும் இல்லை.

<u>புரட்டு நாவு</u>

மிகைப்படுத்தி பேசுதல் தனக்காக செய்யக் கூடியதாகும், புரட்டு நாவு என்பது மற்றவர்களுக்காக பேசக் கூடிய ஒரு பொய்யாகும்.

**யூதா 1 : 16**

இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்.

புரட்டிப் பேசுதல் மற்றவர்களின் தயவைப் பெறுவதற்கும், தகுதியில்லாதவர்களை பொய்யாகப் புகழக்கூடிய செயலாகும்.

**சத்கீதம் 5 : 12**

கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர்.

தேவனுடைய பிள்ளைகள் இப்படிப்பட்டவைகளை செய்யக்கூடாது, தேவனின் தயவு எஸ்தருக்கு கிடைத்ததினால், அவள் பெர்சியா நாட்டின் இளவரசியானால், தேவனின் தயவை தானியேல் பெற்றதன் மூலமாக இராஜாவின் காரியதரிசியிடம், அசுத்த உணவை சாப்பிடாத வண்ணம் உதவியை பெற்றான், தேவனின் தயவை யோசேப்பு பெற்றதன் மூலமாக, பார்வோனின் தளபதியானான், தேவனின் பிள்ளைகள் தேவனை சார்ந்தவர்களாகதான் இருப்பார்களே தவிர வேறு எந்த தொழில் நுணுக்கத்களையும் சார்ந்திருக்க மாட்டார்கள்.

புரட்டிப் பேசுதல் தரம் தாழ்ந்த மக்களுக்குத் தான். விஷயம் தெரிந்த மக்களுக்கு இதைப் பயன்படுத்த முடியாது. புரட்டிப்பேசுதல் எதிர்மறையான உணர்வுகளை உருவாக்கக்கூடியது, பொய் எப்போது நம்முடைய வாழ்க்கையில் நுழையும் என்றால், நாம் மற்றவர்களால் கவரப்படாமல் பாராட்டப்படாமல், சாத்தான் கொடுக்கும் எதிர்மறையான உணர்வுகள் நமக்கு இருக்கும் போதுதான்.
இதைப் போலத்தான் மற்றவர்களுக்கும், ஊணர்□க□ல் ஆரோக்கியமாக இருப்பவர்கள் உண்மையாக கிடைக்கும் சிறப்பை பாராட்டுவார்கள், பொய் பேசுபவர்கள், பொய்யை சாதூர்யமாக பயன்படுத்தி தத்கள் தவறுகளையும், தோல்விகளையும் மறைத்துக் கொண்டு தகுதியற்ற வெகுமதிகளை பெற நினைக்கிறார்கள்.

---

## நாள் 3 : மழுப்பும் நாவு

---

நியாயாதிபதிகள் 16 : 15

இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக்கொண்டிருக்கிறதினால்,
சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு,

சிம்சோன் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர், அவர் வலிமையான போர் சேவகராக இருந்தார், இஸ்ரவேல் மக்களை பிலிஸ்தியர் பிடியிலிருந்து காப்பாற்ற கடவுள் சிம்சோனை தேர்ந்தெடுத்தார். தேவன் சிம்சோனுக்கு அதிமிகு திறமையையும் சக்திகளையும் கொடுத்து ஆசீர்வதித்தார். அவருடைய வல்லமையின் இரகசியம், வளர்ந்த அவருடைய முடியில் இருந்தது

சிம்சோனுடைய வீழ்ச்சி அவருடைய இச்சையான பேராசையினால் கவரப்பட்ட போது ஆரம்பித்தது, தெலிலா என்ற பெலிஸ்தய பெண்மணியின் தந்திரத்தில் விழ ஆரம்பித்தார். நிறைய சூழ்ச்சிக்கு பின்னால் சிம்சோனின் வலிமையின் இரகசியத்தை அவள் தெரிந்து கொண்டாள். அவள் அவனுடைய தலைமுடியை சிரைத்து, தேவனால் கொடுக்கப்பட்ட வல்லமையை அவனிடமிருந்து எடுத்து போட்டாள் மழுப்புதல் என்பது நாவின் ஒரு தந்திர செயலாகும், அதற்கு நீடித்த விளைவுண்டு, யோசித்து பாருத்கள் சாத்தான் ஏவாலை எப்படி மழுப்பலாக பேசி தன்னுடைய வழிக்கு கொண்டு வந்து, தேவனுடைய கட்டளையை மீறச் செய்தான். மழுப்பிப் பேசுபவர்கள், ஒவ்வொரு முறையும் அதில் வெற்றி பெறும்போது உற்சாகம் அடைவார்கள், ஆனால் முடிவில் தத்ளுடைய எல்லா நம்பிக்கையையும் இழந்து போவார்கள்.

ரோமர் இராஜியத்திற்கு எதிராக மழுப்பி பேசகூடியவர்களை இயேசு சுட்டிக்காட்டி கடிந்து கொண்டார். அவர்கள் இயேசுவிடத்தில் வந்து அவரை புகழ்ந்தும், பாராட்டியும் பேசிவிட்டு அவரை சிக்கவைக்க வேண்டும் என்று, சீசருக்கு வரியை கொடுப்பது சரியா தவறா என்று கேட்டார்கள்.

**லூக்கா 20 : 22–23**

22. இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்.
23. அவர்களுடைய தந்திரத்தை அவர் அறிந்து, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

இயேசு அவர்களைப்பார்த்து, ஏன் என்னை சோதிக்கிறீர்கள் என்று கேட்டார், இயேசு, தன்னுடைய ஞானத்தை பயன்படுத்தி, அவர்களின் சூழ்ச்சியை வெட்கப்படும்படி செய்தார்.

இயேசு ஒருபோதும் அப்படி மழுப்பலான பேச்சை யாரிடமும் பேசவில்லை, அவர் மரணத்தை சந்திக்கும் போது கூட அவர் முழு உண்மையையே எல்லா நேரத்களிலும் பேசினார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இப்படிப்பட்ட பேச்சை நடைமுறை படுத்தவும் சகித்து கொள்ளவும் கூடாது.

---

## நாள் 4 : பதறுகிற நாவு

---

நீதிமொழிகள் 29: 20

தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப்பார்க்கிலும் மூடனை நம்பலாம்.

உத்களுடைய மூளை வேலை செய்வதற்கு முன்பாக உத்களுடைய நாவை செயல்படுத்தியிருக்கிறீர்களா ? பின்பு அதற்காக வருத்தப்பட்டிருக்கிறீர்களா ? நீத்கள் வெகுலியாக இருந்தாலும் கூட நாம் பதறுகிற பேசின் முடிவில் ஒருவரை காயப்படுத்தி இருப்போம்.

**யாக்கோபு 3:2**

நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்.

ஒருவேலை நீத்கள் பதட்டத்தை கட்டுப்படுத்த கேலிக்கையான பேச்சுகளை பேசலாம், அல்லது வேதனையில் இருக்க கூடிய ஒருவரை ஆறுதல் படுத்தும் படி பேசலாம் ஆனால் முடிவில் அது வேதனையை அதிகரிக்கும்.

**நீதி 18 : 13**

காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு, அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்.

**ஒருவர் உத்களிடம் சொல்ல வந்த காரியத்தை சொல்ல விடாமல் உத்களுடைய பேச்சால் பேசி அதை தடுத்திருக்கிறீர்களா ?**

**பிரசத்கி 5 : 2**

தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.

சாலமோன் தேவனுக்கு முன்பாக மனம் பதறி ஒரு வார்த்தையும் பேச கூடாது என்று எச்சரிக்கிறார். நான் அவசரப்பட்டு தவறாக சொல்லிவிட்டேன் என்று எதையும் ஒதுக்க முடியாது.

நியாயாதிபதி 11 : 30–40

30. அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால்,

31. நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பிவரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்.

32. யெப்தா அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ண, அவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டுப்போனான். கர்த்தர் அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்.அவன் அவர்களை ஆரோவேர் துவக்கி மின்னித்திற்குப் போகுமட்டும், திராட்சத்தோட்டத்து நிலங்கள்வரைக்கும், மகா சங்காரமாய் முறியஅடித்து, இருபது பட்டணங்களைப் பிடித்தான். இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்.

33. அவன் அவர்களை ஆரோவேர் துவக்கி மின்னித்திற்குப் போகுமட்டும், திராட்சத்தோட்டத்துநிலங்கள் வரைக்கும், மகா சங்காரமாய் முறியஅடித்து, இருபது பட்டணங்களைப் பிடித்தான்.இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்.

34. யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தப்புரு வாசித்து நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள். அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள். அவளையல்லாமல் அவனுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை.

35. அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய். நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன். அதை நான் மாற்றக்கூடாது என்றான்.

36. அப்பொழுது அவள்: என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்துபேசினீரல்லவோ? அம்மோன் புத்திராகிய உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும்ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியேஎனக்குச் செய்யும் என்றான்.

37. பின்னும் அவள் தன் தகப்பனை நோக்கி: நீர் எனக்கு ஒரு காரியம் செய்யவேண்டும். நான்மலைகளின்மேல் போய்த் திரிந்து, நானும் என் தோழிமார்களும் என் கன்னிமையினிமித்தம் துக்கங்கொண்டாட, எனக்கு இரண்டுமாதம் தவணைகொடும் என்றாள்.

38. அதற்கு அவன்: போய்வா என்று அவளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிட்டான். அவள் தன்தோழிமார்களோடும் கூடப்போய், தன் கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கங்கொண்டாடி,

39. இரண்டுமாதம் முடிந்தபின்பு, தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிவந்தாள். அப்பொழுது அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான். அவள் புருஷனை அறியாதிருந்தாள்.

40. இதினிமித்தம் இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் போய், நாலுநாள் கீலேயாத்திலுள்ள
யெப்தாவின குமாரத்தியைக்குறித்துப் புலம்புவது இஸ்ரவேலின் வழக்கமாயிற்று.

யெப்தா தேவனுக்கு முன்பாக மனம்பதறி பண்ணின அந்த பொருத்தனை பற்றி நமக்கு தெரியும், இதில் உள்ளதைப்போல், நாம் நம் வார்த்தையில் கவணமாக இருக்க வேண்டும், இல்லையென்றால் இந்த நிகழ்ச்சியில் நடந்தது போல் அந்த வார்த்தைக்காக நாம் வருத்தப்பட வேண்டியிருக்கும்,

பேசுவதற்கு முன்பாக நிறுத்தி யோசித்து பேசுத்கள், அப்படி செய்யும் போது, அது உத்களை துன்பத்களிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் பாதுகாக்கும்.

**யாக்கோபு 1 : 19**

ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்;

இதற்காகதான் தேவன் நமக்கு 2 காதுகளையும் 1 வாயையும் படைத்தார். நேர□தை எப்படி வீணடித்துவிட்டோம் என்றால் அதை பெற முடியாதோ, அப்படியே நம் வார்த்தைகளும் இருக்கிறது. ஒருமுறை பேசிவிட்டால் மறுபடியும் அதை திரும்ப பெற இயலாது, மற்றவரிடத்தில் பேசுவதற்கு முன்பாக நேரத்தை ஒதுக்கி, வார்த்தைகளை யோசித்து பேச வேண்டும்.

## நாள் 5 : பிரிவினை உண்டுபண்ணும் நாவு

**மத்தேயு 5 : 9**

சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

பரிவினையை உண்டுபண்ணுவது தான் சாத்தானின் மிகப்பெரிய ஆயுதமாக இருக்கிறது. ஒரு குடும்பத்திலோ அல்லது தேவனுடைய குடும்பத்திலோ இரண்டு பேர் சேர்ந்து செய்ய கூடிய ஒரு காரியத்தை அழிப்பது இந்த பிரிவினை உண்டுபண்ணும் நாவாக இருக்கிறது. நாம் இருவர் ஒருமனப்பட்டு தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளும் போது அது எவ்வளவு பலன் தரும் என்பதை சாத்தான் நன்கு அறிவான்,

**மத்தேயு 18 : 19**

அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சிலர் சமாதானத்தை உடைப்பவர்களாக இருக்கிறார்கள், அதில் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள், இது வேதனைக்குரியதாகும். கேள்வி என்னவென்றால்,அதில் ஒருவராய் நீத்கள் இருக்கிறீர்களா ?

**நீதிமொழிகள் 6 : 19**

அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே.

தேவன் வெறுக்கும் ஏழு அறுவறுப்பானவைகள் குறித்து இது சொல்கிறது, அதில் ஒன்று சகோதரர்களுக்குள்ளே துராலோசனையைப் பிணைக்கும் இருதயம் உள்ள ஒருவர்.

எபேசியர் 4 : 3

சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

இத்கு பவுல் சமாதானத்தின் ஆவியின் ஒருமையை காத்துக்கொள்ள வேண்டும் என்று நம்மை எச்சரிக்கிறார். சமாதானத்தை உண்டுபண்ண நமக்கு அதிகம் தேவைப்படுவது நிறைய முய�சிகள், மனத்தாழ்மை, தேவ பக்தியாகும். வெளியரத்கத்தில் சமாதானம் இருக்கிறது, வெளியரத்கம் என்பது மறைந்திருக்கக் கூடியவைளை வெளியே கொண்டு வருவது. பேசாமல் இருக்கும் போது அல்ல. வெளியரத்கம் என்பது பாவத்தை சகித்துகொள்வதில் அல்ல, மாறாக அதை தெளிவாக பேசுவதில் தான் உள்ளது. பாவத்தை வசனத்தின் உண்மையோடு பேசும்போது கொ�ச காலம் அது வேதனையை கொடுத்தாலும், அது உறுதியான சமாதானத்தையும் ஒற்றுமையையும் கொண்டு வரும்.

வெளியரத்கம் என்பது நம்முடைய சந்தேகத்கள், பயத்கள், கவலைகளை வெளிப்படையாக பேசுவது. மற்றவர்களுக்கு எல்லாம் தெரியும் என்று நாம் நினைப்பது வெளியரத்கமாய் இருக்காது. நான் சொல்லாமலே என்னை குறித்து மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் அல்லது நான் சொல்ல வேண்டியவைகளை நான் சொல்லாமலே மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைப்பது பெருமையாகும் அதில் வெளியரத்கம் இருக்காது.

நம்முடைய உணர்வுகள் நிரந்தரமானவைகள் அல்ல என்பதை நினைவுகூறுத்கள்.அவை தற்காளிகமானவைகள், அது நீண்ட நாள் நிலைக்காது, தற்காலிகமான உணர்வுகளை நீத்கள் வெளிப்படையாக பேசாவிட்டால் அந்த உணர்வுகள் உத்கள் இருதயத்தில் நிலைத்து நின்று மாறாத ஒரு உணர்வாக அல்லது மனஉறுதியாக மாறிவிடும்.

**எபிரேயர் 12 : 15**

ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்,

தேவன் சொன்ன எச்சரிக்கையை நாம் மறவாமல் இருப்போம்.

---

## நாள் 6 : வாக்குவாதம் செய்யும் நாவு

---

**நீதிமொழிகள் 20 : 13**

தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண்விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்.

ஒற்றுமையில் பிரிவினை வரும்போது பிரிவினையை உண்டுபண்ண கூடிய மக்கள் அதில் சந்தோஷப்படுகிறார்கள், வாக்குவாதம் செய்பவர்கள் மற்றவர்களை தரம்தாழ்த்தி பேசுவதில் சந்தோஷப்படுகிறார்கள், வாக்குவாதம் செய்பவர்களுடைய நாவு ஒன்றுக்கும் பயன்படாததாக இருக்கிறது, அதன் மூலம், நண்பர்களின் நன்மதிப்பையும், மக்களையும் பயன்படுத்தவும் முடியாது. நாம் வாக்குவாதம் செய்யும் போது கற்றுக்கொள்ள முடியாது, இதனால் நம்மை மற்றவர்கள் திருத்துவதற்கோ தேறும்படி செய்வதற்கோ சந்தர்ப்பம் இல்லாமல்போகிறது. நாம் எப்போது சிறப்பாக மாறமுடியுமென்றால், ஒரு காரியத்தை கவனிப்பதின் மூலமாகவும், கலந்து பேசுவதின் மூலமாகவும், அந்த காரியத்திலிருந்து கற்றுக் கொள்ளுவதின் மூலமாகவும் தான், வாக்கவாதம் செய்வதால் நாம் சிறப்பானவர்களாக ஆக முடியாது, சில மக்கள், வாக்குவாதம் செய்வது ஒரு சாதாரண காரியம் என்று நினைக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் அப்படிப்பட்ட குடும்ப பின்னனியிலிருந்து வளர்ந்திருப்பார்கள்.

வாக்குவாதம் செய்வதினால் தனக்கு நன்மதிப்பு உயரும் என்று சிலர் நினைக்கிறார்கள். சண்டைப் போடுபவர்கள் தத்களை பாதுகாக்க அப்படிச் செய்கிறார்கள், இதனால் அவர்களுடைய நன்மதிப்பு உயருவதில்லை, வாக்குவாதம் செய்வதால் யாரும் எதையும் பெற்றுக் கொள்வதில்லை.

**நீதிமொழிகள் 17 : 14**

சண்டையின் ஆரம்பம் மதகைத்திறந்துவிடுகிறதுபோலிருக்கும்; ஆதலால் விவாதம் எழும்புமுன் அதை விட்டுவிடு.

சாலமோனுடைய அறிவுரையை இத்கு பார்க்கிறோம். அது உத்களின் விருப்பம் என்று சொல்வதின் மூலமாக நாம் சண்டையை முடிவிற்கு கொண்டு வர முடியும்.

**மத்தேயு 5 : 25**

எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.

உன் எதிராலிகளிடத்தில் சீக்கிரமாய் நல்மனம் பொருந்த வேண்டும் என்று இயேசு இத்கு சொல்கிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமக்கு ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு காரியத்தை சண்டையில் முடியாத வண்ணம் இருக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நம் இரட்சிப்பை பாதிக்கச் செய்யும் அவ்விசுவாசி சொல்லும் ஒரு காரியத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது, அதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் மென்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

பென்ஜமின் பிராத்கிலின் அவர்கள் அடிக்கடி சொல்வது என்னவென்றால், இந்த விஷயத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் அந்த விஷயத்தில், நீத்கள் தவறாக நினைக்க வில்லை என்றால் நான் அதை செய்யாமல் இருக்க அனுமதி கொடுப்பீர்களா ?

---

## நாள் 7 : பெருமை பேசும் நாவு

---

**நீதிமொழிகள் 27 : 2**

வாய் அல்ல, புறத்தியானே உன்னைப் புகழட்டும்; உன் உதடு அல்ல, அந்நியனே உன்னைப் புகழட்டும்.

தேவனை மறக்கும் போதுதான் நாம் பெருமையாகிறோம். எனக்கு கிடைத்ததெல்லாம் என்னுடைய கடினவேலையினாலும், திறமையினாலும் கிடைத்தது என்று நாம் நினைக்க ஆரம்பித்து விடுகிறோம். நேபுகாத்நேசர் செய்த அந்த காரியத்தை நினைத்துப் பாருத்கள், அவர் ஒரு நாள் தன்னுடைய அரண்மனைமேல் உலாவிக் கொண்டிருக்கும் போது எப்படி தன்னை குறித்து மேன்மையாக பேசினான் என்று.

தானியேல் 4 : 30

இது என் வல்லமையின் பராக்கிரமத்தினாலும், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்

தேவன் உடனடியாக அவனுக்கு ஒரு பாடத்தை புகட்டினார். அவன் தன்னுடைய இராஜ்ஜிய பாரத்திலிருந்து நீக்கப்பட்டு, மிருகத்களின் நடுவிலே ச□சரித்து அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப் போலவும் அவனுடைய நகத்கள் பட்சிகளுடைய நகத்களைப் போலவும் வளரும் மட்டும் அவனுடைய சரீரம் ஆகாயத்து பனியிலே நனைந்தது, அவன் மனதில் பாதிக்கப்பட்டிருந்தான். அவன் தேவன் தான் எல்லாவற்றையும் இராஜரீகம் பண்ணுகிறார் என்றும் எல்லாவற்றிற்கும் அவரே அதிபதி என்று உணர்ந்த பின்னரே தேவன் அவனுடைய இராஜ்ஜியத்தை திரும்பக் கொடுத்தார்.

அவன் சொன்ன வார்த்தைகளை தானியேல் 4: 34,35ல் பார்க்கலாம்.

(34.அந்த நாட்கள் சென்றபின்பு: நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன். என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது. அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன். அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

35. பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன். )

பெருமையாக இருப்பவர்களுடைய விதியை பற்றி நாம் வேதாகமத்திலிருந்து படிக்கும் போது அது நம்மை தாழ்மையாக இருக்கச் செய்கிறது.

பவுல் சொன்ன வார்த்தைகளை குறித்து பாருத்கள், ( முடிந்தால் உத்களுடைய அலுவலகத்தில் இதை எழுதி மாட்டி வையுத்கள்) உன்னை விசேஷத்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்? நமக்குள் உள்ள திறமைகள் தேவனால் கொடுக்கப்பட்டது. அது தேவனுடைய மகிமைக்காக கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு கிடைக்கும் பாராட்டு, புகழ்ச்சி ஒரு வாசனை திரவியத்தைப் போன்றது. இதை நீத்கள் சரீரத்தின் மேல் பயன்படுத்தலாம் . இதை நீத்கள் குடித்தீர்கள் என்றால் அது உத்களை அழித்துவிடும்.

**1 கொரிந்தியர் 15 : 10**

ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது.

---

## நாள் 8 : தன்னையே சிறுமைப்படுத்தும் நாவு

---

**யாத்திராகமம் 4: 10**

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல. நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றான்.

நீத்கள் உத்களை குறைவாக மதிப்பிடும் பொழுது, உத்களது மதிப்பை நீத்கள் சிறுமைப்படுத்துகின்றீர்கள். இது பெருமையின் மறுபக்கமாக இருக்கின்றது. நீத்கள் எதையும் செய்ய தகுதியற்றவர்கள், நீத்கள் பிரயோஜனமற்றவர்கள் என்ற உணர்வை சாத்தான் உத்களுக்குள் ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக நீத்கள் உத்கள் வாழ்வில் கிடைத்த எல்லா வாய்ப்பையும் இழந்துவிடுகிறீர்கள். தன்னை சிறுமைப்படுத்துவது தாழ்மையை போன்று இருந்தாலும், உண்மையிலே இது கடவுளுடைய வார்த்தையும், விசுவாசத்தையும் புறக்கணிக்க கூடியதாக இருக்கின்றது. (பிலிப்பியர் 4 : 13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. )

உத்களை குறித்து நீத்கள் என்ன சொல்கிறீர்களோ அது முக்கியமாக இருக்கின்றது.

**லூக்கா 8 : 30**ல் ( இயேசு அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார்; அதற்கு அவன்: லேகியோன் என்றான்; அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான்.)

இயேசு பிசாசுப் பிடித்த அந்த மனிதனின் நோக்கத்தை கடிந்துகொள்கிறார்.

இயேசு அவனை நோக்கி உன் பெயர் என்னவென்று கேட்டார், அதற்கு அவன் என் பெயர் லேகியோன் என்றான், லேகியோன் என்பது அவனது பெயர் அல்ல ஆனால் அவன் அனுபவித்துக் கொண்டிருக்கும் தற்காலிகமான சூழ்நிலையாக இருக்கின்றது. அவனிடத்தில் அநேக பிசாசுகள் இருந்தன. ஒரு சோகமான விஷயம் என்னவென்றால் அந்த மனிதன் தனது தற்காலிகமான சூழ்நிலையை நிரந்தரமான ஒன்றாக எண்ணியிருந்தான்.

நாம், நம்முடைய வாழ்வில் ஏற்படக்கூடிய தற்காலிகமான நிகழ்வுகளை நிரந்தரமானதாக கருதுகின்றோம்.

ஒருமுறை வீழ்வது என்பது நாம் எல்லா முயற்சியிலும் தோற்பது என்று அர்த்தமல்ல, ஒருமுறை வீழ்வது இனி எல்லாமுறையும் வீழ்ச்சிதான் என்று அர்த்தமல்ல நாம் தேவனின் பெலத்தில் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டவர்களாய் இருந்தால் அது நம்மை நம்பிக்கையின் பாதைக்கு கொண்டு செல்லும்.

**2 கொரிந்தியர் 2 : 14**

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு
அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தன்னையே சிறுமைப்படுத்திக் கொள்வது கடவுளுக்கு பிரியமில்லாத காரியம். ஏனென்றால் இது விசுவாசத்தினால் அல்லாமல் எதிர்மறையான உணர்வுகளில் இருந்து புறப்படக்கூடியதாக இருக்கின்றது. மோசே தன்னுடைய மந்தமான நாவை குறித்து குறை பேசும்பொழுது கடவுள் வருத்தப்படுகின்றார்.

யாத்திராகமம் 4 : 11–12

11. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா ?

12. ஆதலால், நீ போ. நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் **என்றார்.**

கடவுள் இல்லாமல் நம்மால் எதையும் செய்ய இயலாது ஆனால் அவருடைய உதவியால் எல்லாவற்றையும் செய்ய முடியும். இதை விசுவாசித்து நம்முடைய தலையை எல்லா சூழ்நிலையிலும் உயர்த்தி இருப்போம்.

---

## நாள் : 9 புறத்கூறும் நாவு

---

**நீதிமொழிகள் 10 : 18**

பகையை மறைக்கிறவன் பொய் உதடன்; புறங்கூறுகிறவன் மதிகேடன்.

புறத்கூறும் நாவு துஷ்டத்தனத்தையும், பொய்களையும் மற்றவர்களின் உண்மையான நிகழ்வுகளை கூறுவதாகும்; இதன் மூலமாக அவர்களின் நன்மதிப்பு, குணாதிசியம் , நல்ல பெயர் இவற்றை கெடுக்க கூடியதாக இருக்கின்றது. பொதுவாக இதை நாம் அரசியல்வாதிகளிடத்தில் காண்கிறோம்.

அவர்களிடத்தில் மட்டும் இல்லாமல் சபையிலும் யார் வேண்டுமானாலும் இவற்றின் சோதனைக்கு உள்ளாகலாம். பரலோகத்தில் புறத்கூறுகிறவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்பது உறுதி,

**(சத்கீதம் 15 : 1–3 )**

1. கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?
2. உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.
3. அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.

நீத்கள் கேலி செய்து ஒருவனுடைய பெயரை கெடுத்ததை யோசித்துப்பாருத்கள். எது உத்களை அப்படி செய்ய செய்தது? டயோடிரிபஸ், புதிய ஏற்பாட்டின் சபை தலைவர் பாதுகாப்பற்ற சூழ்நிலையை சந்தித்தார். யோவான் சில போதகர்களை இந்த சபைக்கு சென்று பேசுமாறு சொன்னார். டயோடிரிபஸ் தன்னுடைய ஆதிக்கத்தை குறித்து பயமுறுத்தப்பட்டார், அதனால் அவர் அவர்களுடன் சேர மறுத்தார்.

இப்படிப்பட்ட நடத்தயை குறித்து யோவான் வருத்தப்பட்டு அவரின் நண்பர் கேயாசியிடம் இதைப்பற்றி விவரித்து இருவரும் தீர்வுகாண ஆலோசித்தார்கள்.

**(3 யோவான் 1 : 10**

ஆனபடியால், நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்வேன். அவன் இப்படிச் செய்துவருவதும் போதாமல் தான் சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமன்றி, ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து, சபைக்குப் புறம்பே தள்ளுகிறான் **)**

தன்னுடைய பதவிக்கு நன்மதிப்பு கிடைக்க வேண்டுமென்றும், பதவி பறிபோய்விடும் என்ற பயத்திலும் மற்றவர்களை புறத்கூறுகிறார்கள் .புறத்கூறும் பொழுது நாம் தேவனுடைய கட்டளையை மீறி நடக்கிறவர்களாக இருக்கின்றோம்.

**சத்கீதம் 75 : 6–7**

6. கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெபம் வராது. 7. தேவனே நியாயாதிபதி,
ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.

கடவுளை தவிர யாராலும் ஒரு மனிதனை உயர்த்த முடியாது.

**ஏசாயா 14 : 27**

சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?

கடவுளுடைய திட்டத்தை யாரும் மாற்ற முடியாது. கடவுள் நமக்கு பாதுகாப்பையும், நன்மதிப்பையும் தருகின்றார். அதனால் நாம் புறத்கூறும் பொழுது கடவுளுக்கு எதிராக பாவம் செய்கின்றோம்.

**( நீதிமொழிகள் 13 : 3)**

தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ
கலக்கமடைவான். )

---

## நாள் 10 : □றத்கூறும் நாவு The Gossiping tongue

---

**நீதிமொழிகள் 18: 8**

கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப்போலிருக்கும், ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும்.

பொதுவாக சிறப்பான அரட்டை நேரம் என்பது மற்றவர்களுடைய சொந்த விவகாரத்களை பேசுவது. ஆனால் தேவன் இதை குறித்து சொல்லுகிறார் எலிப்பொறியில் வைக்கும் சுவையான பதாத்ததிற்க்கு ஒப்பிடுகிறார், அதில் மாட்டாமல் தப்பிப்பது மிகவும் கடினம். சில நேரத்களில் வீண்பேச்சு பேசுவதை தடுப்பது மிகவும் கடினம் என இப்போது உணருகிறோம்.

நாம் அரட்டை அடிக்கும் போது, நேர்மையாய் நடப்பதில்லை. தேவனுக்கு பிரியமான காரியத்களை செய்யும் போது நாமும் கடவுளும் சிறப்பானவர்களாக இருப்போம்,அவர் சந்தோஷப்பட நம்மை சிருஷ்டித்தார், அதினால், சமாதான செய்திகளை சொல்லும் போதும், பகிர்ந்துகொள்ளும் போதும்

யோசிக்க வேண்டியவை, நான் ஏன் இதை செய்கிறேன்? அரட்டை அடித்துதான் நான் நண்பர்களை சம்பாதிக்க முடியுமா?

உண்மையாகவே மாறாக நாம் மற்றவர்களுடைய துர்நாற்றமான பாவத்தில் விழுகிறோம் நாம் வாழ்கையில் குறிக்கோளில் நோக்கமாயிருக்கும் போது, இப்படிப்பட்ட அறிவீணமான செயலிலும், குப்பையான விஷயத்திற்கும் நேரம் செலவிடமாட்டோம்.

**நீதிமொழிகள் 20: 19**

தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான்; ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே.

இனி நாம் மற்றவர்களுடைய பொது வாழ்க்கையில் நுழையாமல் இருப்போம் என்று இன்று முடிவெடுப்போம். மற்ற மக்களுடைய வாழ்க்கையின் நிகழ்சிகளை தெரிந்துகொள்ள சுறுசுறுப்பாய் இருக்க வேண்டாம்

---

## நாள் 11 : தலையீடு ம் நாவு The meddling tongue

---

**2 தெசலோனியன் 3: 11**

உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத்திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.

ஒருவருடைய பொது வாழ்கையானாலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் தலையிடுவது வரவேற்க்கதக்க காரியமில்லை.

வீண் பேச்சை போன்று இல்லாமல், மனிதனுடைய வாழ்கையில் நேரடியாய் நுழைவது, இந்த மூக்கை நுழைக்கும் நாவு, இந்த பொருள் எவ்வளவு விலை? அத்கு என்ன நடக்கிறது? இதை எப்படி வாத்கினீர்கள்?

இப்படிப்பட்ட கேள்விகள் வீண்பேச்சு அல்ல, சில நேரத்களில் நாம் மற்றவர்களுக்கு உதவுவதற்க்காக கேட்க்க கூடிய கேள்வியாகவும் இருக்கிறது, நாம் நினைவில் வைத்து கொள்ள வேண்டியது. நான் சரியான இடத்தில் இருக்கிறேனா? இந்த கேள்வி எனக்கு உண்மையில் தேவைப்படுகிறதா?

**நீதிமொழிகள் 26: 17**

வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப்போலிருக்கிறான்.

காது, நாயின் முக்கியமான உறுப்பு, அதை நீத்கள் பிடித்து இழுத்தால் நிச்சியமாய் கடி வாத்குவீர்கள். அதே போல், மற்றவர்களுடைய வேலையில், நுழைந்தால் அவமானம் வரும். ஒருவேளை, நீத்கள் பெற்றோராக இருந்தால், சில நேரத்களில் இப்படிப்பட்ட கேள்விகளை கேட்க வேண்டிய சூழ்நிலை வரும், இதை குறித்து தவறான கருத்து வேண்டாம். ஆனாலும் சாந்தமாகவும் உணர்வுப்பூர்வமாகவும் பேச வேண்டியது முக்கியமாக இருக்கிறது. அவர்கள் கற்று கொள்ள நேரத்கொடுத்கள்

**1 பேதுரு 4: 15**

ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது.

அடுத்தவர்களுடைய வாழ்க்கையில் அனவசிமாய் நுழைவது ஒரு பாவம், அப்படிப்பட்ட சூழ்நிலை வந்தால், நோக்கத்தை தெரிந்துகொண்டு ஜெபம் செய்யுத்கள். சிலர் சொல்லுவார்கள், தத்களுடைய வேலையில் சரியாய் இருப்பவர்கள்

வெற்றியாளர்களாக இருப்பார்கள , அவர்களுக்கு கொ□சம் போட்டியாளர்கள் இருப்பார்கள், இதை குறித்து என்ன நினைக்கிறீர்கள்.

## நாள் 12 : காட்டிக்கொடுக்கின்ற நாவு

நீதிமொழி **11 : 13**
புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான்; ஆவியில் உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்.

காட்டிக் கொடுத்தல் என்பது ஒரு மனிதனின் உணர்ச்சி பூர்வமான சொந்த விஷயத்களை அறிந்து அவனை ஏமாற்றி அழிவுக்கு கொண்டு செல்தல். வீண்பேச்சு ஒரு மனிதனை அழிவுக்கு கொண்டு செல்லாது. ஆனால் வெட்கத்தை உண்டு பண்ணும், காட்டிக் கொடுப்பது என்பது ஒரு மனிதனுடைய இரகசியத்களை அவன் எதிரியிடம் கொடுத்து தவறான முறையில் பயன்படுத்துவது.

இயேசுவை காட்டிக் கொடுக்க யூதாஸ் சிறு முயற்சிதான் எடுத்தான். ஏனெனில் இயேசுவைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்து இருந்தான். இயேசுவின் வாழ்வை பற்றிய எல்லா விஷயத்களையும் பழக்க வழக்கத்களையும் அறிந்து வைத்து இருந்தான். இதன் மூலமாக சுதந்தரமான ஒரு வாழ்வை எவ்வித பாதிப்புமின்றி இயேசுவோடு வாழ்ந்து இருந்தான். ஆனால் அவனின் காட்டி கொடுத்த குணத்தின் மூலமாக அழிவை சந்தித்தான், காட்டிக் கொடுத்தல் என்ற குணம் நம்மை தகுதியிழக்க செய்வதுடன், கவுரவத்தையும் இழக்க வைக்கின்றது.

உத்களுக்கு தீர்க்கப்படாத எதிரான நினைவுகளை யார் மீதாவது வைத்து இருக்கின்றீர்களா ?
யாரையாவது அவர்களின் நம்பிக்கையை சிதைக்கும் வகையில் காட்டி கொடுத்து இருக்கின்றீர்களா ?
இன்னும் மனம் மாறாத பாவத்துடன் இருக்கின்றீர்களா ?

இன்னொரு வகையில் யாராவது உத்களின் நம்பிக்கையை சிதைத்து காட்டி கொடுத்து இருக்கீறார்களா ?
இதை குறித்து என்ன நினைக்கின்றீர்கள். இன்னும் அந்த மனிதன் மீது கோபத்துடன் இருக்கின்றீர்களா ?

நமது கிறிஸ்துவ வாழ்வில் இரண்டு விஷயத்களை கற்று கொள்ள வேண்டும் மன்னிப்பு கேட்டல், மன்னிப்பது இரண்டையும் கற்று கொள்ள வேண்டும், இந்த இரண்டு குணத்களும் நம்மிடையே இல்லாவிட்டால் நாம் மாறாத அடிமைத்தனத்திற்கு சென்று விடுவோம்.

**ரோமர் 8: 28**
அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

கடவுள் எல்லாவற்றையும் சிறப்பாக செய்து உள்ளார் என்பதை நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.

இன்றே முடிவு எடுத்கள், நம்பிக்கையான கடவுளிடம் நம்பிக்கையுள்ள, நன்றியுள்ள வாழ்வை வாழ்வதற்கு முடிவு எடுத்கள் ஏனெனில் நம்பிக்கையான சிநேகம் இருக்கிறது.

## நாள் 13 : குறைவு படுத்தும் நாவு

**எபேசியர் 4: 29**

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

மக்கள் உத்களிடம் பேசியபிறகு உற்சாகத்தை பெற்று செல்கிறார்களா ? அல்லது மனதொடிந்து செல்கிறார்களா ?

**1 தெசலோனி 5: 11**

ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.

மற்றவர்களை தாழ்மையாக நடத்தும் பொழுது உத்களை பற்றி உயர்வானவார்களாக நீத்கள் உத்களுக்குள் நினைக்கின்றீர்களா ?

சுத்தியலால் வீட்டை கட்டவும் முடியும் அழிக்கவும் முடியும். அதே போலதான் வார்த்தையும். நாம் மற்றவர்களின் வெற்றியை சிறப்பாகவும், தாழ்த்தியும் கூற முடியும். கை குலுக்கி மற்றவர்களை உற்சாகப்படுத்துவதும், நன்மையான உற்சாகமான வார்த்தைகளை கூறுவதும் நல்ல உறவை கொண்டு வரும். வெளியிலும், வீட்டிலும் உற்சாகப்படுத்தும் குணம் என்பது நம்மை பற்றிய நல்ல நம்பிக்கையை வெளிப்படுத்தும்

கணவன் மனைவி, குழந்தைகள், ஒருவரிடத்தில் ஒருவர் உற்சாகமான வார்த்தைகளை கூற வேண்டும். கணவன் மனைவியிடம் நீ வாழ்வில் மிகவும் முக்கியமானவள் என்று சொல்ல வேண்டும், மனைவி, கணவனை உற்சாகபடுத்த வேண்டும், இளவயது உள்ளவர்களை உற்சாகபடுத்துவது மிகவும் முக்கியமானது நண்பரிடம் சென்று, அவர்கள் கிடைத்ததற்கு நன்றி கூற வேண்டும்.

கடவுள் நம்மிடம் கூறகிறார், நீத்கள் என் பிரியமானவர்களும், நம்பிக்கைக் குரியவர்களும் கடவுளால் நேசிக்கப் பட கூடியவர்களாகவும் இருக்கிறீர்கள் என்று கூறிய உறுதிமொழியை நினைவு கூற வேண்டும்.

## நாள் 14 : பரியாசம் செய்யும் நாவு

சத்கீதம் 1 : 1

எலியாப் என்பவர் தாவீதின் மூத்த சகோதரர் உண்மையில் அவர் ஒரு பரியாசக்காரர் தாவீது படைக்களத்திற்க்கு அனுப்பப்பட்ட போது பெலிஸ்தியர்கள் தேவனை இகழ்ந்ததைக் குறித்து வருத்தப்பட்டார், தாவீது தன்னுடைய தேவனிடத்தில் ஒரு பாதுகாப்பு உள்ளவராக இருந்தார். ஆனால் இது எலியாபிற்கு அப்படி அல்ல, அவர் என்ன சொன்னார் என்றால் ( 1 சாமுவேல் 17 : 28– ல் ) பார்க்கின்றோம், தாவீதின் தைரியத்தையும் எண்ணத்தையும் குறித்து அதிகமாக கோபப்பட்டான். பரியாசம் பண்ணக்கூடிய நபர் மற்றவர்களுடைய எண்ணத்களை இகழ்வார்.

இது எப்படி என்றால் சொல்பவர்களையும், மற்றவர்களையும் பாதிக்கும், பரியாசத்தை தனியாக பார்க்க முடியாது, அது நிறைய மக்கள் இருக்க கூடிய ஒரு காரியமாக இருக்கின்றது. எந்த சூழ்நிலையில் இருந்தாலும் அது உறவுகளை பாதிக்க கூடியதாக இருக்கின்றது. பரியாசம் செய்வதால் கிடைக்கும் நட்பு ஆழமற்ற நட்பாக இருக்கின்றது. பரியாசக்காரரிடத்தில் நண்பராக இருப்பது அழிவுக்கேற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றது. சத்கீதம் 1 : 1–ல் உள்ளது போல துன்மார்க்கனின் ஆலோசனையில் நடவாமலும்,

பாவிகளின் வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருந்து ஆசீர்வதிக்கப்பட்ட மக்களாக இருப்போம்.

## நாள் 15 : எல்லாம் தெரியும் என்கிற நாவு

மற்றவர்கள் கேட்காமலேயே நீத்கள் ஆலோசனை தரகூடிய நபராக இருக்கிறீர்களா? அல்லது என்னுடைய கருத்துதான் மற்றவர்களுடைய கருத்தை காட்டிலும் சிறந்தது என்று நினைக்க கூடிய நபராக இருக்கிறீர்களா? அதை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறீர்களா? நீத்கள் தொடர்ந்து இதை செய்யுத்கள் என்று உபயோகப்படுத்த கூடிய நபராக இருக்கிறீர்களா?

**நீதிமொழிகள் 12 : 23**
விவேகமுள்ள மனுஷன் அறிவை அடக்கிவைக்கிறான்; மூடருடைய இருதயமோ மதியீனத்தைப் பிரசித்தப்படுத்தும்.

நீத்கள் ஆலோசனை கொடுப்பதில் சரியான நபராக இருப்பினும் எது சிறந்தது என்று உத்களுக்கு தெரிந்திருப்பினும் அதை உணர்ச்சிபூர்வமாக்காமல் விட்டுவிடுத்கள், ஏனென்றால் அதிகாரம் நட்பைக்கூட நம்மைவிட்டு பின் தள்ளி விடும்.

இந்த பிரச்சனையை நாம் எப்படி கையாள முடியும்? யாராவது ஒரு நபர் நமக்கு எந்த விஷயம் நன்றாக தெரியுமோ அதை குறித்து அவர்களை நன்றாக பேசவிடுத்கள். அவர்கள் பேசும்போது நாம் குறுக்கிடக் கூடாது, இது நம்முடைய தாழ்மைக்கும் உணர்ச்சி பூர்வமான முதிர்ச்சிக்கும் பயிற்சியாக இருக்கும்.

நீத்கள் எல்லாம் தெரியும் என்று நினைத்தீர்கள் என்றால் மேலே உள்ளதை நாம் பரிசீலிக்க வேண்டும், உத்களுடைய ஞானத்தில் பிறதிபளிப்பு ஒரு புகை தோற்றம் போல பாதுகாப்புயின்மையாக இருக்கிறதா? நீத்கள் பாராட்டை எதிர்பார்கிறீர்களா அல்லது நீத்கள் நினைக்க கூடிய காரியத்தில் மற்றவர்களிடமிருந்து கவனம் கிடைக்கவில்லை என்று நினைக்கிறீர்களா?

மற்றவர்களிடம் நீத்கள் பேசும்போது உத்களுடைய வார்த்தையை சாதாரனமாக வைத்து கொள்ளுத்கள், கவனமாக கேளுத்கள், மற்றவர்களுடைய ஆலோசனையை கேளுத்கள் மற்றும் அதை சரிசெய்வதை விட்டுவிடுத்கள், இப்படி செய்வதால் தனிப்பட்ட முறையில் நம்முடைய உறவுமுறை இன்னும் அதிகமாக வளர்வதற்கு ஒரு வழியாக இருக்கும்.

## நாள் 16 : கடினமான நாவு

**நீதிமொழிகள் 15 : 1**
மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.

பொறுமையற்ற, ஏமாற்றம், வளர்ச்சியில் குறைவு, மன அழுத்தம்..... இப்படிப்பட்ட விஷயத்கள் நம்மை கடினமான சொல்லுக்கு அளாக்கிவிடும், கடினமான சொல் அரிதாய் சரியான முடிவை தரும்.

சாலமோனை பொறுத்தவரை ஞானம் உள்ள பெண்ணுள் தயையுள்ள போதகம் அவளின் நாவின்மேல் இருக்கிறதாம். மற்றவர்களிடம் சாந்தமாக பேசும் பழக்கம் வெற்றிக்கு ஒரு விதிமுறையாக இருக்கிறது.

இதை நாம் நினைத்தோம் என்றால், நாம் கோபப்படுவதற்கு உரிமை இல்லை ஏன் என்றால் தேவன் நம்மிடம் கடினமாக இல்லை மற்றும் அவர் நமது தந்தையாகவும் இருக்கிறார், ஆகையால் நாம் அவரை பிரதிபளிக்க வேண்டும். தேவன் நம்மேல் கிருபையாய் இருப்பதுபோல் நாமும் மற்றவர்களிடம் தேவனுடைய கிருபையை காட்ட வேண்டும்.

பிரச்சனைகளை சரிசெய்யாமல் நம்முடைய தலையை மண்ணுக்குள் புதைத்து கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை மற்றும் பிரச்னையும் சூழ்நிலையும் குறித்து மற்றவர்களிடம் அணுகுவதற்கு முன் நாம் தேவனிடம் சென்று அவருடைய வார்த்தையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**ஏசாயா 55: 11**

அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

கடினமான சொல் தேவனுடைய நீதியை கொண்டுவராது. கடினமான சொல் எப்போதும் மறிப்பது இல்லை. அது ஒரு மனிதனுடைய வாழ்நாள் முழுவதும் பாதிப்பை கொண்டு வந்துவிடும். இன்று நிறைய மக்கள் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கபட்டிருக்கிறார்கள் ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கையில் பிறர் தொல்லைக்கு இலக்கானவர்களாக இருக்கலாம், அல்லது பிறர்உடைய பலிக்கு ஆழாயிருக்கலாம், மோசம் போயிருக்கலாம்.

அது அவர்களுடைய பெற்றோராகளாக இருக்கலாம், ஆசிரியர்களாக இருக்கலாம் அல்லது பாதுகாப்பு இல்லாத, துணை அல்லாத தலைவர்களாக இருக்கலாம்.

**நீதிமொழிகள் 16 : 32**

பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.

வசனம் இப்படியாக சொல்லுகிறது. பலவானை பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன். நினைவில் கொள்ளுத்கள் நாம் வெட்டுவதாலோ அல்லது துண்டிப்பதாலோ அதை சரி செய்து விடமுடியாது. வார்த்தையை திரும்ப எடுத்து கொள்ள முடியாது, மற்றும் நம்மை குறித்து கடினமாக சொன்னால் நம்முடைய குணம் கடினமாக மாறிவிடுகிறது, ஆகையால் அந்த நேரத்தில் நாம் தேவனிடம் செல்ல வேண்டும், சென்று பரிசுத்த ஆவியின் வல்லமையை தேடவேண்டும், மற்றும் விடுதலைக்கு ஏற்ற வசனத்களையும் தேட வேண்டும். நினைவில் கொள்ளுத்கள் சாந்தத்தின் அதிகாரம் நமது நாவில் உள்ளது

---

## நாள் 17 : சாமர்த்தியமற்ற நாவு

---

**கொலோசெயர் 4 : 6**

அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.

தானியேல் மற்றும் அவரது மூன்று நண்பர்கள் ஒரு பெரிய பிரச்சனையில் இருக்கிறார்கள். பாபிலோனின் இராஜா நேபுகாத்நேச்சார், அவர்களுடைய நிலத்தையும் அவர்களையும் கைப்பற்றி கொண்டார். ராஜா, அறிவில் சிறந்தவர்களையும் அழகானவர்களையும், ராஜாவின் அரண்மனையில் சேவிக்க திறமையுள்ளவர்களாகிய சில வாலிபர்களை தெரிந்தெடுத்தார். பிரச்சனை என்னவென்றால் ராஜாவின் உணவுப்பட்டியல் இந்த யூத சகோதரர்களின் உணவு விதிகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது தானியேல் இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையை எந்த எதிர்ப்புகளையும் காட்டாமல் சாமார்த்தியமாக சமாளித்தார்.

**தானியேல் 1 : 8**

தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.

தானியேல் ராஜாவின் மேஜையில் பரிமாறக்கூடிய உணவை உண்டு தன்னை தீட்டுப் படுத்த கூடாது என்று தீர்மானமாக இருந்தான். அவன் சாமார்த்தியமாக வேறொரு திட்டம் தீட்டினான். தானியேல் சாமார்த்தியமாக சைவ உணவை திராட்சரசமில்லாமல் உண்பதற்கு அனுமதிப் பெற்றுக் கொண்டார். தானியேல் அத்கு உள்ள தலைமை அதிகாரிகளிடத்தில் தயவு கிடைக்கவும் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கவும் கடவுள் உதவி செய்தார்.

நாம் பல நேரத்களில் திறமையைக் காட்டிலும், சாமார்த்தியமே நிறைய பலன்களைக் கொடுக்கின்றது. சீஷர்களாகிய நமக்கு நேர்மையாக இருப்பதுதான் சிறந்த கொள்கையாக இருக்கின்றது. இதிலிருந்து நாம் எதையும் கூட்டவும், குறைக்கவும் முடியாது. ஆனால் இது நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதற்கு உரிமை கொடுக்காது.

நாம் ஒரு முக்கியமான திறமையை வளர்த்து கொள்ள வேண்டும். அது என்னவென்றால் கடினமான மற்றும் பிரச்சனை நிறைந்த சூழ்நிலைகளை எதிர்கொள்ள கூடிய திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். ஏனென்றால் சில உண்மைகள் தானாகவே வேதனைகள் மற்றும் வலியைக் கொண்டு வரக் கூடியதாக இருக்கின்றது.

**( யோபு 6 : 25 )**

செம்மையான வார்த்தைகளில் எவ்வளவு வல்லமை உண்டு? உங்கள் கடிந்து கொள்ளுதலினால் காரியம் என்ன ?

உண்மையை சொல்லும்பொழுது ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ளும் அந்த வேதனைகள், உணர்வு பூர்வமான பாதுகாப்பு, சுயமதிப்பு மற்றும் வளரக்கூடிய எண்ணத்களை கொண்டு வரக் கூடியதாக இருக்கின்றது.

சாமார்த்தியமுள்ள பேச்சு ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வேறுபடக்கூடியதாக இருக்கின்றது.

**( யோவான் 1 : 17 )**

எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.

இயேசு தனக்கு கிடைத்த எந்த ஒரு தருணத்திலும் கிருபையின் நிமித்தமாக உண்மையை சொல்வதற்கு தவறியதில்லை. கோபம், வெறுப்பு, ஏமாற்றத்களினால் பரிசுத்தமின்மை வெளிப்படுகின்றது. பேசுவதற்கு முன்பாக இரண்டு முறை யோசிக்க வேண்டும். பரிசுத்தஆவியானவர் உத்களை வழி நடத்துவார்.

---

## நாள் 18 : பயமுறுத்திச் சம்மதிக்கசெய் நாவு , கட்டாயப்படுத்தும் நாவு

---

**1 சாமுவேல் 17: 44**

பின்னும் அந்தப் பெலிஸ்தன் தாவீதைப் பார்த்து: என்னிடத்தில் வா. நான் உன் மாமிசத்தை ஆகாயத்துப்பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் கொடுப்பேன் என்றான்.

கோலியாத் நினைத்தான் தாவீதை கொள்ளுவது ஒரு கேக்கை துண்டு செய்வதுபோல் இருக்கும் என்று, இந்த சொல் கோலியாத் நாவில் இருந்து சாதாரணமாக வந்தது.

ஒரு பயமுறுத்திச் சம்மதிக்கும் சொல் கோலியாத்திடமிருந்து வந்தது, இப்படியாக பெயரை சொல்லி பயமுறுத்தும் வார்த்தை, தாவீதை இளிவாக பேசுவதன் மூலம், மற்றும் பல...

ஆனால் தாவீதின் பதிலோ வேறுபட்டு இருந்தது, தாவீதோ தன்னை பயமுறுத்தும் எதிராலிக்கு முன் அவருடைய விசுவாசத்தை தேவன் மேல் வைத்தார்.

**1 சாமுவேல் 17 : 45–46**

45. அதற்குத் தாவீது பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்.
46. இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார். நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன். அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்

கட்டாயபடுத்தும் நாவு எப்போதும் மற்றவர்களை பயமுறுத்தியும், பாதுகாப்பற்ற எண்ணத்தை உருவாக்குவதாகும். சத்தம் போடுவது கட்டாயப்படுத்தும் நபரோட வழியாக இருக்கும். நாம் தேவனுக்கு மட்டும் பயப்பட முடிவு செய்தோம் என்றால் யாருமே நம்மை பயமுறுத்த முடியாது.

தேவன் எப்போதும் ஒருவரை ஒருவர் அமுக்கவோ அல்லது மேற்கொள்ளவோ விடுவதில்லை. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் இருவருக்கும் அத்குள்ள மீன்கள், பறவைகள், மிருகத்கள் எல்லாவற்றின் மேலும் தேவன் அதிகாரம் கொடுத்தார், ஆனால் அவைகளை மேற்கொள்ள அதிகாரம் கொடுக்கவில்லை.

கட்டாயப்படுத்தும் நபர் மற்றவர்களுடைய சரீரத்திற்கும், உணர்ச்சிக்கும் பாதிப்பை கொண்டு வருவார்கள், எப்படி என்றால் தலைவலி, கவலை, பதட்டம், அழுத்தம், களைப்பு, சோர்வு, இதை தேவன் நாம் ஒருவருக்கொருவர் செய்யக்கூடாது என்று எதிர்பார்க்கிறார்.

பயமுறுத்துதல் வீட்டில் ஒரு அமைதியை வேண்டுமானால் கொண்டு வரலாம் நீத்கள் மற்றவர்களை பயமுறுத்தவோ, கட்டாயபடுத்தவோ நினைத்தால், இது நாம் மாறுவதற்கு சரியான நேரமாக இருக்கிறது.

ஏன் மற்றவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்க வேண்டும்? இது வேண்டுமானால் நமக்கு தவறான எண்ணத்களை கொண்டு வரலாம், குழப்பமான எண்ணத்களை கொண்டு வரலாம், கலவரமான சூழ்நிலையை கூட கொண்டு வரலாம்.

இது நமது ஆழ்ந்த பாதுகாப்பு இன்மை மற்றும் பாவத்தை மறைக்க கூடியதாக இருக்கும். இதையெல்லாம் நாம் விட்டுவிட வேண்டும்.

---

## நாள் 19 : மென்மையற்ற நாவு

---

**ஏசாயா 35 : 8**

அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும், அது பரிசுத்த வழி என்னப்படும், தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை, அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.

கற்பனை செய்து பாருத்கள் நமது தேசிய நெடு□சாலை சிறப்பானதாயும், நாகரிகம் மிக்க ஓட்டுநர்களை உடையதாயும், கெட்ட வார்த்தை இல்லாததாயும், துன்பம் இல்லாததாயும், வேதனை இல்லாததாயும், அழுகை இல்லாததாயும் இருக்கிறது என்றால் எப்படி இருக்கும். எது ஒரு மனிதனை மென்மையற்றவனாக மாற்றுகிறது, போதுமான நேரம் இல்லாத காரணத்தினாலா ? நிறைய காரியத்களுக்கு குறைந்த நேரம் கிடைப்பதினாலா ? பொறுமை இல்லாமையாலா ? மற்றவர்களாகிய முதலாளி, மனைவி, குழந்தைகள் இவர்களால் கட்டாயப் படுத்தப்படுவதாலா ? சீர்திருத்தம் இல்லாததாலா ? கெட்ட பிள்ளைகளாலா ? அனுதின வாழ்க்கையின் அழுத்தமா ? பொருமை காப்பது என்பது அரிதான காரியமாக இருக்கிறது. ஒழுத்கின்மை, அநாகரிகமான பேச்சு வழக்கு நம் வாழ்வின் பழக்கமாகி விட்டது. ஒருவரிடம் நாம் கடுமையாக நடந்துக் கொள்வது, அவர்களின் நாளையே வீணாக்கிவிடும்.

**லூக்கா 6 : 31**

மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

பல நேரத்களில் நாம் பொன் போன்ற கட்டளைகளை மறந்து விடுகின்றோம். ஏனென்றால் மற்றவர்களை பற்றி நினைப்பதற்கு போதுமான நேரம் மக்களுக்கு இருப்பதில்லை. மக்கள் தத்களைப் பற்றியே எண்ணம் கொண்டிருக்கிறார்கள். நாம் பொதுவாக, பொது இடத்களில் மிகவும் சத்தமாக தொலைபேசியின் மூலமாக மற்றவர்களை தொந்தரவு செய்யும் வகையில் பேசுவதை பார்க்கிறோம்.

(எ.கா) சபை ஆராதனை, பொது கூட்டத்கள், மற்றும் கலந்துரையாடும் நேரத்தில், தொலைபேசி பேசுவதையும் பார்க்கின்றோம். இதன் மூலமாக மற்றவர்களை தொந்தரவு செய்யக்கூடாது.

**1 கொரிந்தியர் 13 : 4–5**

4. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,
5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,

நாம் கடவுள் மீது வைத்திருக்கும் அன்பு, நம்பிக்கை நாளுக்கு நாள் மற்றவர்களை கவரக் கூடியதாக இருக்க வேண்டும். நம்மிடையே யாராவது கடுமையாக நடந்து கொண்டால் எவ்வாறு இருக்கும் ? யாராவது உத்களிடம் கடுமையாக நடந்துகொண்டால் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் நாம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும

கடுமையாக ஒரு மனிதர் நடந்து கொண்டால், அவர்கள் அப்படித்தான் என்று நாம் விட்டுவிட வேண்டாம். ஏனென்றால் அது அவர்களுக்கு ஒரு பழக்கமாக மாறிவிடும், மேலும் நீத்களும் அவர்களைப் போலவே கடுமையாக நடந்து கொள்வதற்கு இழுக்கப்படாமல் பார்த்து கொள்ள வேண்டும். நாம் செய்வதற்கான பலனை கடவுளிடம் இருந்து பெற்றுக் கொள்கிறோம்.

---

## நாள் 20 : நியாயந் தீர்க்கும் நாவு

---

இயேசு நியாயந் தீரக்கும் பரிசேயர்களுக்கு ஒரு கடுமையான நேரத்தை கொடுத்து இருக்கிறார். அவர்கள் இயேசு சொல்லும் எல்லாக் காரியத்திலும் குற்றம் கண்டுபிடிப்பவர்களாகவே இருந்தார்கள். இயேசுவின் பதிலுரையை இத்கும் பார்க்கிறோம்.

யோவான் 8 : 15–16

15. நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள், நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை;
16. நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்; ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்.

எப்பொழுதும் மற்றவர்களை நியாயந் தீர்க்கும் எண்ணத்தோடு இருப்பவர்கள், குற்றம் கண்டுபிடிப்பதில் வேலையாக இருப்பார்கள். நாம் மற்றவர்களை அவர்கள் செயல்களின் மூலமாகவும் அவர்களின் நோக்கத்தை வைத்தும் நியாயந்தீர்ப்பவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால் நாம் அதே சூழ்நிலையில் இருக்கும்பொழுது அந்தமாதிரி நடந்து கொள்ளாதவர்களாக இருந்திருக்கலாம்.

நாம் ஒரு மனிதன் நமக்கு முன்பாக மிகவும் மெதுவாக, சோம்பேறியாக அசைந்து கொண்டு நடப்பதைப் பார்கலாம், ஆனால் நம்வழி நாம் நடப்பது ஒருவேளை சுறுசுறுப்பாக இருக்கலாம். அல்லது எதுவுமே இல்லாமல் இருக்கலாம். மற்றவர்கள் மாறுபட்டவர்களாக இருக்கலாம். அவர்களின் எண்ணமும் நம்முடைய எண்ணமும் , ஒரே விஷயத்தில் வெவ்வேறாக இருக்கும். நிறைய சமயத்களில் நியாயத்தீர்ப்பு என்பது ஒருவர் சொல்லும் கட்டுக் கதைகளை பொருத்தே அமைகின்றது.

நாம் ஒரு விஷயத்தை கேள்விப்பட்டு, அதை வைத்துக் கொண்டு நியாயந் தீர்ப்பவர்களாக இருக்கின்றோம். இயேசு மனிதர்களை நியாயந்தீர்க்கும் பொழுது கடவுளின் தரத்தை வைத்தே அதை செய்கிறார்.

இந்த ஒரே வழிதான் நாம் நியாயந் தீர்ப்பதை நீதியாக செய்ய முடியும். நாம் இதை முதலில் நமக்கே செய்து கொண்டால் அது நன்மையாக இருக்கும். யார் கடவுளின் தரத்தின்படி நடவாமல் இருக்கிறார்களோ அவர்களிடம் கனிவோடு அவர்களுக்கு இந்த குணத்திலிருந்து வெளிவருவதற்கு உதவி செய்யுத்கள்.

## நாள் 21 : தன்னை உயர்த்திப் பேசும் நாவு

பிலிப்பியர் 2 : 4

அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

தன்னைத்தான் உயர்த்திப் பேசும் நாவிற்கு பொருத்தமான ஒருவரை (எஸ்தர் 5 : 11 ல் தன் ஐசுவரியத்தின் மகிமையையும், தன் பிள்ளைகளின் திரட்சியையும், ராஜா தன்னைப் பெரியவனாக்கி, தன்னைப் பிரபுக்கள்மேலும் ராஜாவின் ஊழியக்காரர்மேலும் உயர்த்தின எல்லாவற்றையும் ஆமான் அவர்களுக்கு விவரித்துச்சொன்னான்.) சொன்ன பெர்சிய நாட்டின் இராஜ்ஜியத்தில் முக்கிய பொருப்பில் இருந்த ஆமோனை சொல்லாமல், இதில் அவனைச் சுற்றியே முழு உலகமும் இருப்பதாக உணர்ந்தான், அவனுடைய சொத்து, அவனுடைய குமாரர்கள், அவனுடைய தொடர்புகள், ராஜாவினிடம் உள்ள நெருத்கிய உறவு, அவன் தன்னை மேன்மைப்படுத்துவதில் சோர்ந்து போகவில்லை.

மற்றவர்களிடத்தில் பேசும்போது நம்முடைய பேச்சில் அதிகம் இருப்பது என்ன? நீத்கள் ஒருவரிடத்தில் பேசும் போது அவர் எப்போதும் அவனுடைய பிரச்சனையைப்பற்றி எப்படி உணர்வீர்கள்? தன்னைப்பற்றியே பேசுபவர்களிடத்தில் நல்ல உறவை வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு பெரிய முள்ளம்பன்றியை அரவணைப்பதற்கு சமம்.

சில நேரத்களில் நாம் மிகவும் முக்கியமான மனிதர்களிடத்தில் பேச வேண்டும் என்ற எண்ணத்தோடு இருப்போம். அந்த எண்ணத்தோடு நாம் அந்நியோந்நியத்தில் ஈடுபடுவோம், நாம் முழு கவனத்தையும் கொடுப்போம், அந்த அந்நியோந்நியமும் சிறப்போடு இருக்கும்.

தன்னை உயர்த்திப் பேசும் நாவுடைய மனிதர்களிடத்தில் ஒரு காரியத்தை சொல்வதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும், ஏனெனில் அப்படிப் பட்டவர்களின் முடிவு வேதனையானது, ஒருவேளை இப்படிப்பட்ட பிரச்சனைகள் உத்களுக்கும் இருக்கும் என்றால், நாம் நம் பரலோக தகப்பனிடம் மீண்டும் சென்று உதவிகளைப் பெறுவோம், முழு மனதோடு, ஆழ்ந்தே உறவுகளை வளர்த்துக் கொள்வோம்.

## நாள் 22 : சபிக்க கூடிய நாவு

**யாக்கோபு 3: 10**

துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகது.

கடவுளை மகிமைப்படுத்தாத வார்த்தைகளை நீங்கள் உங்கள் வாயிலிருந்தோ அல்லது நாவின் நுனியின் வரை வருவதை குறித்தோ நீங்கள் உணர்ந்தது உண்டா ? கெட்ட வார்தைகளை நாம் பேசினால் மற்றவர்கள் நம்மை வசனத்தின் மூலமாக நியாயந்தீர்ப்பார்கள், இப்படிப்பட்ட ஒருவராக நீங்கள் இருந்தால், உங்கள் பரிசுத்த ஆவியை நீங்கள் அனுமதிப்பதில்லை.

**யாக்கோபு 3: 8–9**

8. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம்நிறைந்ததுமாயிருக்கிறது.
9. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.

இச்சையான அல்லது ஒழுக்கமற்ற வார்த்தைகள் தேவ பிள்ளைகளுக்கு அலங்காரமாயிராது. எப்பொழுது மக்கள் கோபமுடையவர்களாகவும், மன அழுத்தம் நிறைந்தவர்களாக இருப்பார்களோ அப்பொழுது கடவுளை மகிமைப்படுத்தாத வார்த்தைகளை கூறுகின்றனர்.

நீங்கள் கெட்ட வார்த்தைகளை இரகசியமாக பயன்படுத்துகின்றீர்களா ? உங்கள் தொடையை தட்டியோ, விலையுயர்ந்தவற்றை உடைத்தோ, காகிதத்தை சுருட்டியோ அல்லது தண்ணீரை கொட்டியோ, பொருளை எரித்து இருக்கின்றீர்களா ? அல்லது கொடூரமான முறையில் சண்டை போடுகின்ற சந்தர்ப்பத்தில் இருந்தீர்களா ? அவையெல்லாம் உண்மையாக வந்தது என்று கூறமுடியாது, ஆனால் அவை நாவின் நுனியிலிருந்து வந்திருக்கின்றது.

**லூக்கா 6:45 ன் படி**

நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.

நாவின் மூலமாக தவறி பேசிவிட்டேன், இருதயத்தில் இருந்து வரவில்லை என்பார்கள். ஆனால் இருதயத்தில் உள்ளவற்றைதான் நாவுகள் அறிக்கை செய்கின்றன. நீங்கள் இப்படிப்பட்டவராக இருந்தால் கடவுளிடம் சென்று உபவாசம் இருந்து ஜெபம் செய்யுங்கள்.

நலம் தரும் விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். தவறான வார்த்தைகளை எதேட்சையாக பேசாமல் ஜாக்கிரதையாக நல்லவற்றை பேச வேண்டும்.

## நாள் 23 : குறை கூறும் நாவு

**சங்கீதம் 142 : 1–2**

1. கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன், கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.
2. அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன், அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.

செலோப்பியாத் என்பவருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள், அவருக்குள் ஒரு பிரச்சனை இருந்தது அவருடைய அப்பா இறந்து விடுகிறார். அவருடைய சொத்தை மகன்கள் யாரும் இல்லாததால், அந்த சொத்தை பெண்களுக்கு பகிர்ந்து கொடுக்கவில்லை.

மேலும், இவர்களுக்கு அப்பா, மகன்கள், கணவன்கள், மகன், உறவினர்கள் என்று யாரும் இல்லாததால் அவர்களுக்கு இந்த பிரச்சனை நேரிட்டது அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் அவருடைய பிரச்சனைகளுக்கு முதலில் தேவன் மற்றும் மோசஸ் இடம் சென்று முறையிட்டார்கள், (எண்ணாகமம் 27)

அவர்கள் சரியான நபரை அனுகினார்கள். தீர்வு, அவர்களுக்கு கடவுள் மோசஸ் மூலமாக அந்த சொத்தை பெண்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்து, சரியான தீர்ப்பு அளித்தார்.

அவர்கள் கடவுளுக்கும், மோசேக்கும் விரோதமாக முணுமுணுத்துக்கொண்டும், குறை கூறிக் கொண்டிருந்தால் என்ன ஆயிருக்கும்? அவர்கள், சொத்தை இழந்திருப்பார்கள்.

சரியான நபரிடம் (கடவுளிடம்) மற்றும் மோசேயினிடம் எடுத்துச் சென்றால் அவர்களுடைய உண்மையான இந்த சொத்து பிரச்சனை, நியாயமான முறையில் தீர்க்கப்பட்டது. நிறைய மக்கள், இதுமாதிரி சரியான நபரிடம் (கடவுளிடம் மற்றம் வழிநடத்துனரிடம்) பிரச்சனைகளை கொண்டு செல்லாமல், தேவையில்லாமல் நிறைய மக்களிடம் சென்று போகிறார்கள். இது ஆன்மீகமானது அல்ல. சத்கீதம் 142 : 1–2 ல் பார்க்கும் போது தாவீது அவருடைய பிரச்சனைகளுக்கு தீர்ப்பு கிடைக்க யாரிடம் செல்கிறார்? கடவுளிடம்.

நீத்கள் எப்பொழுதாவது குறை கூறும் கூட்டத்துடன் சேர்ந்து சோதனைக்கு உட்பட்டிருந்தீரா? அதன்மூலம், தனிமையாக்கப்பட்டிருந்தீரா? உதாரணம்,மனைவிகள் கூட்டமாக சேர்ந்து கணவன்மார்களைப்பற்றி குறைகூறுவார்கள். கணவன்கள் துன்மார்க்கமான வழியில் செல்வார்கள். நம்மிடம் பிரச்சனை என்று வரும்போது நாம் இரண்டு விஷயத்களை செய்வது நமது பொறுப்பு. ஒன்று பிரச்சனைக்கு சரியான தீர்ப்பு, மற்றொன்று அதே பிரச்சனைக்கு காரணம் என்ன? அதாவது அந்த பிரச்சனையின் மறுபக்கம் என்ன? என்று சொல்ல வேண்டும்.

---

## நாள் 24 — எதிர்பேச்சு பேசும் நாவு

---

**1 பேதுரு 3 : 9**

தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப் பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.

எதிர்பேச்சு பேசுவதைவிட சுலபமான காரியம் ஒன்றுமில்லை. இப்படி பேசுவது தற்காலிகமான ஒரு சந்தோஷத்தை கொடுத்தாலும் அதனால் வரும் குற்ற உணர்வு நீண்ட நாள் இருக்கும், நாம் ஒவ்வொரு விஷயத்திலும் எப்படி எதிர்த்து பேசுவது, எப்படி எதிர்மறையான காரித்களை செய்வது என்று சாத்தான் நமக்கு ஒவ்வொரு வாய்ப்பையும் வழத்குகிறான்.

எதிர் பேச்சு பேசுவதின் ஆழமான அர்த்தம் என்னவென்றால் பெற்ற தண்டயையை திருப்பிக் கொடுத்தல் அல்லது பழிவாத்குதல் ஆகும்.

**ரோமர் 12 : 17–19**

17. ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்.
18. கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.
19. பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.

நான் எதிர்த்து பேசுகிறேன் என்றால், நான் பரிசுத்த ஆவியின் கீழ்படிதலை ஒதுக்குகிறவனாகவும், தேவனின் சிட்சைக்கு எதிர்த்து நிற்கிறவனாகவும், தேவ நீதிக்கு கீழ்படியாதவனாகவும் இருக்கிறேன். இயேசு என்னுடைய இடத்தில் இருந்தால் என்ன செய்வார்? எப்படி அந்த காரியத்தை செய்வார் என்று நினைப்பதன் மூலம் இப்படிப்பட்ட பாவத்திலிருந்து நாம் மேற்கொள்ள முடியும். இயேசுவைப் பின்பற்றுவதற்காக அழைக்கப்பட்ட நாம், அவருடைய குணத்களிலும், அவர் செய்த காரியத்களிலும் நாம் வளர வேண்டும்.

---

## நாள் 25 : குற்றப்படுத்தும் நாவு

---

**வெளி 12 : 10**

அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான்.

யோபுவின் வாழ்க்கையில் காரியத்கள் சரியாக செல்ல வில்லை, அவர் தன் குழந்தைகள், ஆரோக்கியம், மற்றும் சொத்துக்களை இழந்தார். அவருடைய நண்பர்களின் பெருமை, பொறாமை மற்றும் தேவையற்ற குணத்களினால் அவரை குற்றப்படுத்தி, அவருடைய வேதனையை அதிகப்படுத்தினார்கள்.

யோபு 22 அவர்கள் வந்து யோபுவைப் பார்த்து அனுதாபப்பட்டார்கள். ஆனாலும் ஏன் யோபு இவ்வளவு வேதனைப்பட வேண்டும், அதற்கு காரணத்தையும் அறிய ஆசைப்பட்டார்கள். யோபுவுக்கு தெரியும் தான் நீதியாக நடந்தான் என்று. இருந்தபோதிலும் தன் நண்பர்கள் அவரை குற்றப்படுத்தியது அவருக்கு தாத்க முடியாத அளவுக்கு வேதனையாக இருந்தது.

தவறு செய்த ஒருவரிடத்திற்கு போய் அவர் செய்த தவறை அவர் உணர்வதற்கு முன்பாக நீத்கள் அவரை குற்றப்படுத்தி காயப்படுத்தி இருக்கிறீர்களா? நீத்கள் அதே மாதிரி செய்கிறீர்கள் என்றால், சாத்தான் செய்த அதே காரியத்தை நீத்களும் செய்கிறீர்கள். தேவனுடைய பிள்ளைகளை குற்றப்படுத்துவதே சாத்தானின் பிரதான வேலையாயிருக்கிறது.

ஆதாம் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்கு பிரியமில்லாமல் பாவம் செய்ததை அவர்களுக்கு எப்படி உணர்த்தினார் என்று நமக்கு தெரியும், கடவுள் அவர்களைப் பார்த்து எவ்வளவு தைரியம் உத்களுக்கு நீத்கள் எனக்கு கீழ்படியாதிருந்திருப்பீர்கள். நன்றியில்லாத பாவிகளாய் இருக்கிறீர்கள், நான் இந்த தோட்டத்தை உத்களை நம்பி கொடுத்திருக்கக்கூடாது, என்று கூறியிருக்கலாம், ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.

**ஆதியாகமம். 3:9–11**

9. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்.
10. அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.
11. அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

கடவுளுக்கு தெரியும் அவர்கள் என்ன பதில் சொல்ல போகிறார்கள் என்று. கடவுள் அப்பொழுதும் கூட ஆதாமுக்கு அவர்செய்த குற்றத்தை விவரிப்பதற்கு ஒரு சந்தர்பத்தை கொடுத்தார். ஒருவரிடம் தெளிவான கேள்வியை கேட்டு, மேலும் அவர்கள் சொல்வதை கவனிப்பதன் மூலமாக நாம் குற்றப்படுத்தும் நாவை மேற்கொள்ள முடியும். கேளுத்கள், கவனியுத்கள். நீத்கள் குற்றம் சுமத்தபடும் போது, நீத்கள் செய்யும் சிறப்பான காரியம் என்னவென்றால் அதை தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்பது தான், உத்களை நன்றாக தெரிந்த ஒருவரை பாதித்திருக்கிறது என்றால், அதை நீத்கள் அவருக்கு உண்மையல்ல என்று விவரித்து சொல்ல வேண்டும்.

அந்த பொய் எத்கிருந்து வந்தது என்று அறிந்து கொள்வதற்கு உத்களுடைய நேரத்தையும் சக்தியையும் அதற்காக வீணடிக்க வேண்டாம். எல்லா பொய்களின் பிறப்பிடம் சாத்தான் தான். கடவுள் ஒருவரே உத்களை ஆராய்ந்து அறிய கூடியவர். அவர் எப்போதுமே சிறப்பான காரியத்தை செய்பவர்.

---

## நாள் : 26 சோர்வடைய செய்யும் வார்த்தைகள்

---

ஒரு சிலருடைய சோர்வடைய செய்யும் வார்த்தைகளினால் நிறைய மனிதர்கள் தத்களது தனிப்பட்ட நோக்கத்களை இழந்து விடுகிறார்கள். படிக்காத மாணவர்களின் கனவுகளையும் கூட ஆசிரியர்கள் இவ்வாறு சிதறடித்து விடுகிறார்கள். குடும்ப நபர்களும் தத்களது குறிக்கோள்களையும் இந்ந மாதிரியான சோர்வடைய செய்யும் வார்த்தைகனினால் நிராகரிக்கிறார்கள். அதேபோல தான் முதலாளியும், தொழிலாளியும். ஒரு சிலருடைய திட்டத்களை நீத்கள் உத்களது உறுதியான வார்த்தைகளினாலும், உற்சாகத்தினாலும் அவர்களுடைய நம்பிக்கையை குலைய செய்திருக்கிறீர்களா ? நாம் வேண்டிக் கொள்கிறதுக்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமை தேவனுக்கு இருக்கிறது. இந்த விசுவாசத்தில் நாம் குறையும் போது இந்தமாதிரி சோர்வடைய செய்யும் நிகழ்ச்சிகள் நடக்கும்

மோசஸ் தன்னுடைய 12 பேர்ருடைய குழுவை உளவுபார்ப்பதற்காக ஒரு தேசத்திற்கு அனுப்பினாா், அத்கு அவர்கள் எண்ணுக்கடத்காத நிறைய வளத்களைப் பார்த்தார்கள். அதில் இரண்டு மனிதர்கள் ஒரு திராட்சைக் குலையை கொண்டு வந்தார்கள் நிறைய பலசாலிகளையும் பார்த்தார்கள், திரும்பி வந்த பின்பு யோசுவா மற்றும் காலேப் இருவரும் அந்த தேசத்தைப் பற்றி உற்சாகமாய் சொன்னார்கள், மற்ற பத்துபேரும் அந்த தேசத்தைப் பற்றி உற்சாகமில்லாமல் இருந்தார்கள் ( எண்ணாகமம் 13 : 31–33) நிறைய மக்கள் சோர்வடைய செய்யும் வார்த்தைகளை நம்பினார்கள். இருப்பினும் கடவுள் காரியத்களையும், அற்புதத்களையும் செய்தார். (எண்ணாகமம் 14 : 36–38)

36. அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து,

37. சபையார் எல்லாரும் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள்.
38. தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருந்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் பத்து பேருடைய வார்த்தைகளை மக்கள் கேட்டிருந்தால், கடவுள் 40 வருடம் மக்களை வனாந்திரத்தில் அலைய விட்டிருப்பார்.

பகல் கனவு காண்பவர்களுடைய எண்ணத்களை நாம் கேள்வி கேட்கக்கூடாது என்று அர்த்தமல்ல, அதேநேரத்தில் மற்றவர்கள் உத்களை உற்சாகபடுத்தும் போது உத்களுக்குள் ஏற்படும் நிகழ்வுகளையும் எண்ணிப்பாருத்கள்.

எதிர்மறையான நிகழ்வுகளால் இந்த உலகம் பாதிக்கப்படுகிறது, ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொருவருக்கும் சிறு சிறு உற்சாகம் தேவைப்படுகிறது. நியாயமில்லாமல் யாராவது உத்களை மனசோர்வடைய செய்தால் உத்களுடைய கண்கள் தேவன்மேல் இருக்கக்கடவது என்று சொல்வது நமது கடமை

## நாள் 27 சந்தேகப்படுகின்ற நாவு

**மாற்கு 11 : 23**

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நாம் மற்றவர்களின் விஷயத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தலாம் ஆனால் நமது வாழ்வில் நம்மால் நடைமுறைபடுத்த முடியவில்லை ஒவ்வொருவரின் வாழ்விலும் நம்மால் கூறமுடியும். எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று. ஆனால் அதே வார்த்தையை நமக்கு சொல்லிகொள்வது எளிதான காரியம் அல்ல.

நாம் நம்பிக்கையோடு சந்தேகப்படாத நாவை உடையவர்களாயிருந்தால் கண்டிப்பாக கடவுளிடம் சத்தியத்தை பெற்றுக் கொள்வோம். இதை மட்டுமல்ல நாம் வாயிலிருந்து சொல்கின்ற வார்த்தைகள் மூலமாகவும் நம்பிக்கையை பெற்றுக்கொள்வோம்.

விசுவாசம் கேள்வியினால் வரும் என்று ரோமர் 10 : 17ல் பார்க்கின்றோம். (ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.)

நாம் நம்பிக்கை இல்லாதவற்றை பேசும்போழுது அவை நம்மிடையே நிலைத்திருக்கின்றது ஆனால் நாம் விசுவாசத்தை அதிகமாக அறிக்கையிடும் பொழுதுதான் நாம் விசுவாசத்தில் அதிகமாக வளர்கின்றோம்.

நம்பிக்கை இல்லாத இருதயத்தின் மூலமாக சந்தேகப்படுகின்ற வார்த்தைகளை பேசுகின்றோம். சொந்த நம்பிக்கையில் நாம் இருக்கும்பொழுது தான் நமக்கு சந்தேகத்கள் ஏற்படுகின்றன

நீதிமொழிகள் 28: 26 கூறுகிறது (தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்.)

தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்.. நீத்கள் உத்கள் வாழ்வில் ஏதாவது ஒரு விஷயத்தில் சந்தேகப்பட்டு கலத்கி கொண்டிருப்பீர்களானால் வசனத்தின் மூலமாக சரிசெய்து கொள்ளுத்கள். கடவுளின் மீது நம்பிக்கை வைத்து சந்தேகத்திற்கு எதிராக போராடுவோம். இருதயத்தில் இருந்து வாசிப்போம் மீண்டும், மீண்டும் வசனத்தின் மூலமாக மன உறுதியை கற்றுக் கொள்வோம்.

கடவுள் மீது நம்பிக்கை வைத்து வாழ்வோம், நாம் தோமாவைப் போல இருக்க வேண்டாம். கடவுளின் காயத்களை நேரடியாக பார்த்தால்தான் நம்புவேன் என்ற சந்தேகத்தை வைத்திருந்தான், கடவுள் இதை குறித்து மகிழ்ச்சி அடையவில்லை.

## நாள் 28 : பேசிக்கொண்டே இருக்கும் நாவு (அல்லது) மிகுதியாக பேசும் நாவு.

நீதி 10 : 19

தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கும் நபர்களை தெரியுமா ? அவர்கள் பேசுவார்கள் ஒருதலைப்பை விட்டு மறுதலைப்புக்கு சென்று பேசிக்கொண்டே இருப்பார்கள். இப்படிப்பட்ட நாவுதான் மிகுதியாக பேசும்நாவு அல்லது தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கும் நாவு. நிறுத்தாமல் பேசும் பெண்களுக்கு இது பொருந்தும் சில ஆண்களுக்கும் ஒத்துவரும்.

ஆதற்காக பேசாமல் இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல, ஆனால் அமைதியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறது.

1 தெசலோசிக்கேயர் 4 : 11

புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு,

நீத்கள் மக்களிடத்தில் பேசும் திறமைவாய்ந்தவர்களாயிருந்தால் அவர்களுடைய கவனத்தை திருப்பவும், கடவுளை பற்றி சொல்வதிலும், வேதவசனத்தின் வல்லமையை கூறுவதிலும் செயல்படுத்கள், இது உத்களை நீதிக்குள்ளாக வழிநடத்தும்.

நீத்கள் அதிகம் பேசாத ஒரு நபராய் இருக்கலாம் ஆனால் தேவன் என்று வரும்போது பேசுவதற்கு உற்சாகப்படுத்கள்.

---

## நாள் 29 : விவேகமற்ற நாவு

---

நீதிமொழிகள் 2 : 11

நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்.

ஒரு பெரிய ஜலபிரளயம் வந்து பூமியை அழித்த பின்பு, நோவா ஒரு திராட்ச தோட்டத்தை நாட்டினான். ஒரு நாள் நோவா குடித்துவிட்டு வெறிகொண்டு நிர்வானமாய் படுத்திருந்தான். நோவாவின் மகன் காம் தன் தகப்பனுடைய நிர்வானத்தை கண்டு, கூடாரத்தை விட்டு வெளியே சென்று தன் சகோதரர்கள் இருவருக்கும் அதை அறிவித்தான் ( ஆதி 9: 22). அப்பொழுது நோவாவின் மற்ற மகன்களாகிய சேமும் யாப்பேத்தும் ஒரு வசித்திரத்தை எடுத்து, பின்பாக சென்று, தன் தகப்பனுடைய நிர்வானத்தை மறைத்தார்கள் இந்த செயல் அவர்களுடைய மனபக்குவத்தை காண்பிக்கிறது.

இப்படிப்பட்ட மனப்பக்குவமுள்ள மனிதர்கள், சொல்லிலும், செயலிலும் விவேகத்தையும் மற்றும் புத்திகூர்மையையும் காட்டுவார்கள்.

காமுடைய செயல் மதியீனமாய் இருந்தது, இது நோவாவிற்கு தெரியவந்தபோது அது அவனுக்கு சாபமாய் முடிந்தது. ஒருவனுடைய ரகசியத்களை பேச வேண்டிய முக்கியத்துவம் இல்லாதபோது, அதை பற்றி எல்லாரிடத்திலும் பேசுவது விவேகம் இல்லை.

நாம் சபையிலும் கூட நெருக்கமான உறவுமுறைகளை வைத்திருக்கிறோம். அப்படி இருக்கும் போது, சபை தலைவர்களின் அல்லது மற்ற சீஷர்களின் ரகசிய பாவத்களை நீத்கள் பார்த்திருக்கலாம். ஆனால் ஞாபகம் வைத்து கொள்ளுத்கள், கடவுள் உத்களை அத்கே ஒரு காரணத்திற்காக வைத்திருக்கிறார். நாத்தான், தாவீதிடம் என்ன செய்தாரோ அதை நாம் மற்றவர்களுக்கு செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கிறார்.

2 சாமுவேல் 12 மற்றவர்களுடைய பாவத்தை பொது மத்தியில் அறிவிப்பது, தேவனுடைய சரீரத்தை பாழாக்குவதற்கு சமம்.

தலைவர்களை தண்டிப்பது கடவுளின் பொறுப்பு ஏனென்றால் தலைவர்கள் தேவனால் அமர்த்தப்பட்டவர்கள். தேவனுடைய பிள்ளைகளுக்கும் இப்படியே நடக்கும்.

## நாள் 30 : மௌன நாவு

பிரசத்கி 3 : 1–7

1. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு, வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.
2. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு,
3. கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு, இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு,
4. அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு, புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு,
5. கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு, தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு,
6. தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு, காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு,
7. கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு, மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு,

முன்னாடி அதிகாரத்தை படித்த பிற்ப்பாடு நம் வாழ்நாளில் பேசாமல் இருப்பது நல்லது என்ற உணர்வு வந்திருக்கலாம். என் நாவை அடக்க வேண்டும், ஆனால் உறவுகளை அமைக்க பேசுவது முக்கியமாகும். ஒரு உடம்பிற்கு ஆக்ஸிஜன் எப்படி முக்கியமோ அதுபோல, உறவுகள் வைத்துக் கொள்ள பேசுவதும் முக்கியமாகும். மற்ற அதிகாரத்கள், எப்படி பேசக்கூடாது என்பதை பற்றி மிகவும் உயர்த்தி காண்பித்தது, ஏனென்றால் அதற்கு மதிப்பில்லை. அதேபோல் காரணமற்ற மவுனத்திற்கும் பிரயோஜனமில்லை.

மௌனம் என்பது பொன்னல்ல, எப்பொழுது என்றால் கோபத்தை வெளிப்படுத்தும் மற்றும் அநாகரிகமான சூழ்நிலையிலுமே மௌனம் தேவை, கடினமான சூழ்நிலைகளில் மௌனம் ஒரு பதிலில்லை, பேசிதீர்க்க வேண்டிய ஒன்றாகும்.

பேச வேண்டிய இடத்தில் மௌனமாய் இருக்கும் போது நம்மை பற்றிய தவறான கருத்து ஏற்படும். நாம் அதை தொடர்ந்து செய்யும் போதும், மற்றவர்களுக்கு வலியை ஏற்ப்படுத்திகிறோம். மற்றவர்கள் நம்மை புறத்கூறும் போதும், தவறாக குற்றம்ச்சாட்டும் போதும் மௌனமாய் இருப்பது நல்லதல்ல.

மனிதர்கள் என்ன சொன்னாலும் உறவுகள் இழந்துவிடுமே என்ற பயத்தினால் பேசாமல் இருப்பதும் நல்லதல்ல. மனிதர்கள் குழியில் விழும் போதும் அதை தடுக்க வேண்டிய சூழ்நிலையில் பேசாமல் இருக்கும் போது, மௌனம் ஒரு பொன்னல்ல, மௌனம் சில நேரத்களில் ( எண்ணா 30: 3–5) சம்மதத்திற்கான அறிகுறி

ஒரு ஜப்பானின் பழமொழி மௌனம் சுவறையே குடைந்தெடுத்துவிடும், பேச வேண்டிய சூழ்நிலையில் மௌனமாய் இருந்து விடுவது உறவுகளில் ஒரு பெரிய ஓட்டை விழுந்து விடும்.